புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2048 மார்ச் 02, 2017 புரட்சி 16 முழக்கம் 07 விலை: ரூ.3.00

## கோவை முழுதும் ‘மோடி’ எதிர்ப்பலைகள்

# கருப்புக் கொடி: கழகத்தினர் கைது






வெள்ளியங்கிரி வனப் பகுதியை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து 4 இலட்சம் சதுர அடியில் யோகா மய்யம் நடத்தி வரும் ஜக்கி வாசுதேவ் என்ற மோசடி ‘குரு’, ‘ஆதியோகி சிவன்’ என்ற ஒரு சிலையை திறந்து வைத்துள்ளார். இந்த சட்ட மீறலுக்கும் ஆன்மீக மோசடிக்கும் ஏற்பு வழங்குவதுபோல பிரதமர் மோடி இந்த சிலை திறப்பு நிகழ்வில் பங்கேற்றதற்கு எதிர்ப்பு தெரிவித்து கோவையில் 24.2.2017 அன்று கழகம் மற்றும் தோழமை அமைப்புகளின் சார்பில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கினார். பிற்பகல் 4.30 மணியளவில் கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகே கருப்புக் கொடிகளுடன் தோழர்கள் திரண்டு, மோடிக்கும் ஜக்கி வாசுதேவுக்கும் எதிரான முழக்கங்களை எழுப்பினர். 5 மணியளவில் தோழர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். 15 பெண்கள் உள்பட 150 தோழர்கள் கைது செய்யப் பட்டனர். சுமார் ஒன்றரை மணி நேரம் கழகத் தோழர்களை ஏற்றி வந்த காவல்துறை வாகனங்கள், மண்டபம் கிடைக்காமல், கோவை நகரையே சுற்றிக் கொண்டிருந்தது. அப்போது காவல்துறை வாகனங்களி லிருந்து தோழர்கள் மோடிக்கும் ஜக்கிக்கும் சங்பரிவார் களுக்கும் எதிராக எழுப்பிய முழக்கங்கள் கோவை நகரம் முழுதும் எதிரொலித்தது. காவல்துறையின் வாகனமே கழகத்தின் வாகனப் பரப்புரையாக தோழர்கள் மாற்றிக் காட்டினார்கள். ஆதித் தமிழர் விடுதலை முன்னணி, புரட்சிகர இளைஞர் கழகம் உள்ளிட்ட தோழமை அமைப்பினரும் போராட்டத்தில் பங்கேற்றனர். கழக அமைப்புச் செயலாளர் இரத்தின சாமி, பொருளாளர் துரைசாமி மற்றும் திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர், சேலம், கொளத்தூர், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம் பகுதிகளிலிருந்து தோழர்கள் திரண்டு வந்திருந்தனர்.

ஜக்கி வாசுதேவ் – ஈஷா மய்ய மோசடிகளை விளக்கி கழக ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் வந்த செய்திகளை துண்டறிக்கைகளாக அச்சிட்டு பல்லாயிரக்கணக்கில் பொது மக்களிடம் கழகத்தினர் வழங்கினர். இந்தத் துண்டறிக்கைகள் பொது மக்களிடையே பெரும் தாக்கத்தை உருவாக்கியுள்ள தாகவும் தோழர்களிடம் தொடர்பு கொண்டு பல செய்திகளை தெரிந்து கொண்டதாகக் கூறி பாராட்டிய தாகவும் தோழர்கள் தெரிவித்தனர்.

மோடி வருகையொட்டி கோவை மாநகரமே எதிர்ப்பு அலைகளாக காட்சி அளித்தது. காலை முதலே கருப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள் தொடங்கி, தொடர் நிகழ்வாக நடந்து கொண்டே இருந்தன.

விவசாயிகள் சங்கம், த.பெ.தி.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மாதர் சங்கம், சமுக நீதி முன்னணி என்று, பல்வேறு அமைப்புகள் தனித்தனியாக போராட் டங்களை நடத்தி கைதானார்கள். 8 திருமண மண்ட பங்களில் 1000க்கும் மேற்பட்ட தோழர்கள் கைது செய்து வைக்கப்பட்டிருந்தனர். மோடி, கோவையை விட்டு சென்ற பிறகு, இரவு 10 மணியளவில் அருணா திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மற்றும் தோழமை அமைப்பினர் விடுதலை செய்யப்பட்டனர்.

## மோடி எதிர்ப்பை இருட்டடித்த ஊடகங்கள்

மோடிக்கு கோவையில் கருப்புக் கொடி காட்டி பல்வேறு இயக்கங்கள் காட்டிய எதிர்ப்பு களை ஊடகங்கள் திட்டமிட்டு இருட்டடித்தன.

3 நாட்கள், நாளேடுகளுக்கு ஈஷாவின் ஜகத்குரு பல கோடி ரூபாயை வாரி இறைத்து தந்த விளம்பரங்களும், தொலைக் காட்சிகளுக்கு தந்த விளம்பரங் களுமே ஊடகங்களின் இருட்டடிப்புக்கு முக்கிய காரணம்.

பெரும் முதலாளிகளும் அரசியல் தலைவர்களும் நடத்தும் அச்சு ஊடகங்களும் தொலைக் காட்சிகளும் வருமானத்தை முன் வைத்தே செயல்படுவதால் மக்கள் எதிர்ப்புகளை புறந்தள்ளி விட்டனர்; மக்களைவிட விளம்பரங்களுக்கு பணத்தை வீசும் ‘ஆன்மிகக் குரு’க்களின் ‘ஆசீர்வாதங்களே’ அவர்களுக்கு முக்கியத் தேவை போலும்!

## பணிந்தது அதிகாரம் ஈரோட்டில் கழகத்தின் வெற்றி!

ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரும், ஈரோடு மாவட்டக் காவல்துறைக் கண்காணிப் பாளரும் மத விழாவில் கலந்து கொள்ள மாட்டோம் என உறுதி அளித்ததால் கழகம் அறிவித் திருந்த போராட்டம் திரும்பப் பெறப்பட்டது.

இராமானுஜரின் ஆயிரமா வது ஆண்டு ஜெயந்தி விழா என்ற பெயரில் 18.02.17 அன்று ஈரோடு, பெருந்துறை ரோடு பரிமளம் மகாலில் நிகழ்வு ஒன்று நடக்க இருந்தது.


இந்நிகழ்வில், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரும், ஈரோடு மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரும் கலந்து கொள்ள உள்ளதாக அறிவிக்கப்பட்டு பதாகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு இருந்தது.

மதச் சார்பற்ற நாடு என்று சொல்லிக் கொள்ளும் நாட்டில், இதுபோன்ற மதம் சம்பந்தப்பட்ட விழாக்களில் அரசு அதிகாரிகள் கலந்து கொள்வது கூடாது என வலியுறுத்தி, நிகழ்வு நடைபெற உள்ள ஈரோடு பரிமளம் மகால் முன்பு திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் அனைத்து முற்போக்கு இயக்கங்களை ஒருங்கிணைத்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அதிகாரி களுக்கும் தகவல் தெரிவிக்கப் பட்டது.

இந்நிலையில் கழக நிர்வாகி களை தொடர்பு கொண்ட ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரும், ஈரோடு மாவட்டக் காவல்துறைக் கண்காணிப் பாளரும் இந்த விழாவில் கலந்து கொள்ள மாட்டோம் என உறுதி அளித்தனர். இதைத் தொடர்ந்து கழகம் அறிவித்தப் போராட்டம் இரத்து செய்யப்பட்டது.

# புரோகிதத் தொழில் ‘கார்ப்பரேட்’ நிறுவனமாகிறது

‘வேதங்களுக்கு காலம் இல்லை; அது கடவுளால் உருவாக்கப்பட்டது; அனாதியானது’ என்று இப்போதும் பார்ப்பனர்களும் ஆர்.எஸ்.எஸ்.சும் கூறிக் கொண்டிருக்கின்றன. அது பழைமையானது என்பதற்காகவே அர்ச்சகர்கள் ‘பஞ்சகச்சத்தோடு’ கீழே மட்டும் மறைத்துக் கொண்டு மேலாடை இல்லாமல், உச்சிக்குடுமி, பூணூல் கோலங்களோடு வலம் வருகிறார்கள். ஆனால், வேத காலங்களில் தோன்றாத நவீன பைக்குகளையும், கார்களையும் கூச்சநாச்சமின்றி பயன்படுத்து கிறார்கள். இந்து மத சாஸ்திரம், கடல் தாண்டக் கூடாது என்றாலும், அதையும் மீறி விமானங்களில் ‘சாஸ்திரமாவது; புடலங்காயவது’ என்று கருதி பறக் கின்றனர். இந்த இரட்டை வாழ்க்கையை




சுட்டிக் காட்டினால், ‘இந்து விரோதி’, ‘பிராமண துவேஷி’ என்கிறார்கள்.

இப்போது, ‘புரோகிதம்’ கார்ப்பரேட் தொழிலாகவே மாறியிருக்கிறது. இது குறித்து ‘இந்து’ ஆங்கில நாளேடு (பிப்.27) விரிவான செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது. பல கோடி ரூபாய் முதலீட்டில் ‘ஹரிவரா’ என்ற கார்ப்பரேட் கம்பெனி ஒன்று இப்போது செயல்படத் தொடங்கி இருக்கிறதாம். இதன் நிறுவனரும் நிர்வாக அதிகாரி யுமான அருண்குமார் சோமாஸ் கந்தன் என்பவர், பல கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கியுள்ள இந்த புரோகித கம்பெனியின் செயல்பாடுகளை விளக்கியிருக்கிறார். இந்த கம்பெனி யின் இணையதள தகவல் தொடர்புகளை கணினி வழியாக தொடர்பு கொண்டால், “பூஜை, யாகம், ஹோமம் உள்ளிட்ட 360 வைதீகச் சடங்குகளுக்கான பூஜை பொருள்கள் உடனே வீடு வந்து சேரும். எந்த ஜாதிக்கு, எத்தகைய சடங்குகளை, எந்த புரோகித முறையில் நடத்த வேண்டும் என்ற தகவல்களையெல்லாம் ஆய்வு

(4ஆம் பக்கம்)

## ஈஷாவின் முன்னாள் சீடர் அம்பலப்படுத்துகிறார்

# ‘குரு’ வேடம் போடுவோர் எவரையும் நம்பாதீர்!

**ஜக்கி வாசுதேவ் உரைகளால் ஈர்க்கப்பட்டு, பிறகு தெளிவு கிடைத்த பிறகு அதிலிருந்து வெளிவந்த அனுபவத்தை வாசுகி பாஸ்கர் என்ற முன்னாள் சீடர் முகநூலில் இவ்வாறு பகிர்ந்துள்ளார்.**

ஈஷா மையம் சட்டத்துக்கு புறம்பாக நடப்பது மட்டுமே நாம் ஈஷாவை எதிர்ப்பதற்கு காரணமாக இருக்கக் கூடாது என்று நான் நினைக்கிறேன். அது அரசியல். சட்டப் பிரச்சினை, பாரதப் பிரதமர் மோடியே சிவனை திறந்து வைக்க வருவதால் சட்டப் பிரச்சினைகள் வலுவிழந்து போகுமென்பதை குழந்தைகூட கணிக்கும். ஜக்கிவாசுதேவ் இந்து மத அடையாளத்தோடு இருப்பதால், இதை எதிர்ப்பது, இந்து மதத்திற்கு எதிரான வழக்கமான பிரச்சாரமாகவும் நிறையப் பேர் நினைக்கக் கூடும். நாம் எவ்வளவு விளக்கினாலும் அவர்களால் அதை புரிந்து கொள்ள முடியாது. ஆனாலும் நாம் ஒருவரை ஆதரிக்க, எதிர்க்க வலுவான காரணம் இருக்க வேண்டும். ஜக்கியின் ‘அத்தனைக்கும் ஆசைப்படு’ என்ற புத்தகம் ஒரு நண்பர் மூலம் எப்படியோ எனக்கு வந்து சேர்கிறது. ஒருவித வெறுப்போடு தான் படிக்க ஆரம்பித்தேன். இறை நம்பிக்கை சம்பந்தப்பட்டது என நினைத்திருந்த எனக்கு ஏமாற்றம். ஒவ்வொரு பக்கமும் சுவாரசியமாக நகர ஒரே மூச்சில் அந்த புத்தககத்தைப் படித்து முடித்தேன். அதைத் தொடர்ந்து அடுத்தடுத்து புத்தகம் வாங்க ஆரம்பித்தேன். சி.டிக்கள் பரவலாக இல்லாத காலத்தில் ஜக்கிவாசுதேவின் வீடியோ தொகுப்புகளை 325 , 250 ரூபாய் என செலவு செய்து அவரது உரைகளைக் கேட்க ஆரம்பித்தேன். ஜக்கிக்கு முழுமையான பின் தொடர்பாளர் ஆனேன். சில காலம் ‘தத்துவமாக’ பேச ஆரம்பித்தேன். ஈஷா போனேன், ஒரு கட்டத்தில் அங்கேயே தொண்டராக சேர்ந்து விடலாமா என்று கூடத் தோன்றியது உண்டு. இதில் இருந்து மீண்டு வெளியே வர எனக்கு உதவி செய்ததே ஜக்கி தான்.

**ஒரு ஏழை அப்பாவிடம் இல்லாத பக்குவமா, ஞானமா, வாழத் தெரியாமல் காட்டிற்கு ஓடி மறைபவனிடம் இருக்கப் போகிறது?**

சில பல வருடங்கள் அவரின் மொத்தப் பேச்சுக்களையும் தொடர்ந்து கேட்டு வந்த எனக்கு பல முரண்பாடான கேள்விகள் துளைத்தன. ஜக்கியிடம் அதைக் கேள்வியாய் வைத்தால் சிரித்து விட்டு சமாளிக்கக் கூடிய பதிலை வைத்திருப்பார் என்று தெரியும். இருந்தும் எனக்குள்ளே எழுந்த கேள்விகள் என்னை வேறு தளத்துக்கு அழைத்துச் சென்றது. புத்தர், ஓஷோ, ஜே. கிருஷ்ணமூர்த்தி மற்றும் வரலாறு, புவியியல் என்று மொத்தமாய் படித்த கலவையை தனக்கே உரித்தான பாணியில் ஜக்கி சாமர்த்தியமாக பேசுவது புலப்பட்டது. நான் மேற்கொண்டு படித்த பல விவகாரங்களின் மறு வடிவமாகத் தான் அவை பெரும்பாலும் இருந்தன. அதுவும் தவறில்லை; குழந்தைக்கு சாதத்தைக் குழைத்துக் கொடுப்பதைப் போல ஒரு குரு கொடுக்கிறார் என்று கூட வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் குழந்தை வளர்ப்பில், பருவ வயது குறித்து ஜக்கி முன்னே சொன்னதற்கு நேர் எதிர்மறையாக அவரது ஆசிரம செயற்பாடுகள் இருப்பதையும், அந்த போதனைகள் மேட்டிமைச் சமூகத்துக்கு மட்டுமே பயன்பட்டதும் என்னை நாளடைவில் நெருடச்செய்தது. கண்விழித்து சமூகத்தைக் கவனிக்கத் தொடங்கிய நேரம் என்று சொல்லலாம். ஜக்கி வாசுதேவை விட்டு விலக ஆரம்பித்த நேரம் நான் உணர்ந்த முக்கியமான கேள்வி ‘அனைத்திற்கும் எப்படி ஒருவன் குருவாக முடியும்? தொண்டர் என்கிற பெயரில் இளம் பெண்களை, ஆண்களை மொட்டையடித்து தன் கூடவே வைத்துக் கொள்ளும் ஒருவன் எப்படி குருவாக முடியும்?’ என்பதுதான். மத குரு என்பவன் யார்? அது என்ன அந்தஸ்து?

கண்டிப்பாக மதத்தின் குரு என்பவனுக்கு மலைக் கழுகின் குணம் அவசியம். மலைக் கழுகு தன் குஞ்சுகளை ஒரு கட்டத்தில் மலையில் இருந்து கீழே தள்ளி விடும். குஞ்சுகள் பறந்தே ஆக வேண்டும். தனக்கான உணவைத் தானே தேட வேண்டும். ஆண்டாண்டு காலமாய் தவமிருந்தாலும் கிடைக்காத அந்த மனநிலையை அந்தக் கழுகு இயல்பிலேயே வைத்திருக்கிறது. தள்ளி விடும் குஞ்சுகள் பறக்கக் கற்று, வளர்ந்து, மீண்டும் தாய்க் கழுகையே கூட கொத்த நேரிடலாம். அது குறித்து அந்த தாய்க் கழுகு யோசிக்கவில்லை, குஞ்சுகள் தன்னைப் போல இந்த உலகத்தை வட்டமிட்டு, தன்னைப் போலவே சகலத்தையும் அனுபவிக்க வேண்டும் என்கிற பரிசுத்தமான எண்ணம் அந்தக் கழுகுக்கு உண்டு. ஒரு மதத்தின் குருவின் உச்ச ஸ்தானம் இது தான். சிஷ்யனே விரும்பினாலும் ஒரு கட்டத்திற்கு மேல் தன்னைச் சார்ந்தே தன்னிடம் பயின்றவன் இருந்து விடுவது, குருவின் தோல்வி. உலகத்தை எதிர்கொள்ள முடியாமல், தன்னைக் குறுக்கிக் கொள்கிற ஒருவன் எதைப் பேசினால் என்ன? பத்தாயிரம் ரூபாய் சம்பளத்தில் மூன்று பிள்ளைகளையும் படிக்க வைத்து, இந்தச் சமூகத்தின் மொத்த அழுத்தங்களையும் எதிர்கொண்டு வாழ்கிற ஒரு ஏழை அப்பாவிடம் இல்லாத பக்குவமா, ஞானமா, வாழத் தெரியாமல் காட்டிற்கு ஓடி மறைபவனிடம் இருக்கப் போகிறது?

தீர்க்கக் கூடிய இடத்தில் இருப்பவன் வேறு ஒருவனிடம் தீர்வுகளுக்கு ஆலோசனை கேட்பதை விட ஒரு முரண், வாழ்க்கையில் இருக்க முடியுமா? சிறு வயதில் இருந்து இந்த வயது வரை நமக்கு எத்தனை எத்தனை குருக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நம்மை வழி நடத்திச் செல்கிறார்கள். ஒவ்வொரு மனிதரும், ஒவ்வொரு உலக உயிரும்கூட நமக்கு பல நேரங்களில் குருவாக வழிகாட்டிக் கொண்டு தான் இருக்கிறது. ‘குரு’ என்பது நபர் அல்ல; அது ஒரு நிலை; அது எங்கும், எதிலும் கிடைக்கும். ஆனால் மொத்த வாழ்க்கைக்கான எல்லா கேள்விகளுக்கும் என்னிடம் பதில் உண்டு என ஒருவன் சிரித்துக் கொண்டு காலம் முழுக்க உபதேசங்களை வழங்கி கொண்டு அமர்ந்திருக்கிறான் என்றால் அவன் எவ்வளவு பெரிய மோசடிக்காரனாய் இருப்பான்? உனக்கு பதில் நான் சிந்திக்கிறேன் என்று ஒருவன் சொன்னால் அது எவ்வளவு அபத்தம்? காலம் முழுக்க என்னோடு பணி செய்து கிட என எத்தனையோ வீட்டுப் பிள்ளைகளை மொட்டையடித்து அடிமைப்படுத்தி வைத்திருப்பதை, ‘நாங்கள் அடிமைப்படுத்தப்படவில்லை’ என்று அந்த பிள்ளைகளே சொல்வதானால் அது அடிமைத்தனம் இல்லாமல் ஆகிவிடுமா? இயங்குகிறவர்களை நம்மால் அடையாளம் காண்பிக்க முடியும். இயக்குகிறவரை நம்மால் அடையாளம் காண்பிக்க முடியாது, அதை முதலீடாக்கித் தான் பலர் இந்த உலகத்தை இயக்கிக் கொண்டு இருக்கிறார்கள். பாதிக்கப்படுகிறவர்களும் சேர்ந்து அதற்கு இசைவதால் நம்மால் குற்றத்தை நேரடியாக நிரூபிக்க முடியாது. அப்படியான ஒரு குற்றவியல் மையம் தான் ஈஷா மையம் Racing, Flying, Dancing, Singing என்று அத்தனைக்கும் ஆசைப்படும் ஒரு குரு, Costume, Design, Ambience, Lifestyle என்று அத்தனையும் தன்னைச் சுற்றி மிக ரசனையாக வடிவமைத்துக் கொள்ளும் ஒரு குரு, தன்னைத் தேடி வருபவர்களை மட்டும் மனநோயாளிகளாக உருவாக்குவதைச் சிந்தியுங்கள். எண்ணிக்கையில்லா புத்தகங்களை வாசித்து உங்களை நீங்களே கேள்வி கேட்டுக் கொண்டு, விடை தேடும் பரந்த சிந்தனையாற்றலை வளர்க்க விடாமல், ஒரே ஒரு புத்தகம் உங்களுக்கு அனைத்தையும் தரும் என்று யாரேனும் பரிந்துரைத்தால் அதை/அவனை ஆய்வுக்கு உட்படுத்துங்கள்.

# கடவுள் - மதங்களை ஒரு பெண் மறுக்கக் கூடாதா?

*‘ஆனந்தவிகடன்’ மார்ச் 2017 இதழில், சபிதா எழுதிய கட்டுரையிலிருந்து.*

‘கணவனை மதிக்காத மனைவியை, படுக்கையைவிட்டு விலக்கி, அடித்துக் கட்டுப்படுத்தலாம்’ என்கிறது குர்ஆன் 4:34.

“பெண்ணைப் படைத்த போதே அவளை பொய் சொல்லும் குணத்துடனும், நகைகளுக்கு ஆசைப்படுபவளாகவும், கோபம், தற்குறித்தனம், சிறுமதி, ஏமாற்று, கெட்ட நடத்தை போன்ற சகல துர்குணங்களுடனும் ஆண்டவன் படைத்துவிட்டான். அவளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள ஆண் கடுமையான முயற்சி மேற்கொள்ள வேண்டும்” என்கிறது மனுசாஸ்திரம்.

“பெண்களுக்கு, உண்மைக்கும் பொய்க்கும் வேறுபாடு பார்க்கத் தெரியாது. அவர்கள் மணலைப் போல உறுதியற்றவர்கள்; பாம்பைப் போல கொடூரமானவர்கள்” என்கிறது பௌத்தம்.

“பாவ உடம்பைப் பெற்ற பெண் - கடவுளை ஆணில்தான் காண வேண்டும்” என, கிறிஸ்துவம் சொல்கிறது.

இப்படியான மத மற்றும் சமயங்களின் தாக்கம்தான் ‘சீறும் பாம்பை நம்பு - சிரிக்கும் பெண்ணை நம்பாதே!’ என ஆட்டோவின் பின்னால் இன்று வரை எழுத வைக்கிறது; சக உயிர் மீது ஆசிட் வீச வைக்கிறது; இரத்த வெள்ளத்தில் வெட்டிச் சாய்க்கிறது.

என் கல்லூரித் தோழி, கலப்புத் திருமணம் செய்து கொண்டவள். ஆரம்பத்தில் கணவரின் சமய வழக்கங்களைப் பின்பற்றினாள். உயர்ந்த பதவியில் இருப்பவள். புத்தகப் புழு. புத்தகங்கள், அவளுக்கான வானத்தைத் திறந்து வைத்தன. சமீபத்தில் சந்தித்த போது அவள் கடவுள் மறுப்பாளராக மாறியிருந்ததைக் கவனித்தேன்.

“பெண்ணை போதை வஸ்துபோல, அடக்க வேண்டிய கொடிய மிருகத்தைப் போலச் சித்திரிக்கும் சமயமும் மதமும் நமக்கு அவசியமா ? எனும் கேள்வி, என்னையும் அறியாமல் எனக்குள் வேரூன்றிவிட்டது. அது மட்டும் அல்லாமல் இங்கே மதங்களின் பேரால் நிகழும் உயிர்ப்பலிகளும் கலவரங்களும் என்னை கடவுள் மறுப்பாளராக மாற்றி விட்டன. ஆனால், என் குடும்பத்தினர், நான் ஏதோ வழிதவறிப் போய் விட்டதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். என்னை பூசாரியிடம் அழைத்துச் சென்று, ‘பேயோட்ட வேண்டும்’, ‘மனநல மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்’ என்றெல்லாம் கூறினர்” என வருத்தமாகப் பேசினாள். எவ்வளவோ முன்னேறிவிட்ட சமூகத்தில், ஒரு பெண் கடவுள் மறுப்பாளராக இருப்பதை ஏற்றுக் கொள்ள ஏன் மறுக்கிறோம் ? ஏன் மனநல மருத்துவரிடம் அழைத்துச் செல்கிறோம் ?

நம் வரலாறு நெடுகவே ஆன்மிகமோ, துறவறமோ அல்லது ‘கடவுள் இல்லை’ என்று வாதிடும் நாத்திகமோ, தனக்கான மார்க்கத்தைத் தேர்வு செய்யும் உரிமையை ஆணுக்கு வழங்கப்பட்டது போல பெண்ணுக்கும் வழங்கப்பட்டிருந்தால், எத்தனையோ பகுத்தறிவு வாதிகளும் பெண் துறவிகளும் இதே மண்ணில் உதித்திருப்பார்கள். ஒரு வேளை, புத்தனுக்குப் பதிலாக அவனது மனைவியே துறவறம் பூண்டிருக்கலாம். அவர்களால் எழுதப்படும் புனித நூல்களில் பெண்ணின் விலா எலும்பில் இருந்து ஆண் உதித்தான் என எழுதப்பட்டிருக்கும். பகுத்தறிவு கொண்ட பெண்ணின் வளர்ப்பில் வளரும் அடுத்த தலைமுறையில், மதத்தின் பெயரால் நிகழும் தீவிரவாதம் குறைந்து போயிருக்கலாம்.

# கல்யாண தத்துவம் கொடுமையானது!

ஆண், பெண் கல்யாண விஷயத்தில் அதாவது, புருஷன்-மனைவி என்ற வாழ்க்கையானது நமது நாட்டில் உள்ள கொடுமையைப் போல் வேறு எந்த நாட்டிலும் கிடையவே கிடையாது என்று சொல்லலாம். நமது கல்யாணத் தத்துவம் எல்லாம் சுருக்கமாய்ப் பார்த்தால், பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள்வது என்பதைத் தவிர, வேறு ஒன்றுமே அதில் இல்லை. அவ்வடிமைத்தனத்தை மறைத்துப் பெண்களை ஏமாற்றுவதற்கே சடங்கு முதலியவைகள் செய்யப்படுவதோடு, அவ்விதக் கல்யாணத்திற்குத் தெய்வீகக் கல்யாணம் என்பதாக ஓர் அர்த்தமற்ற போலிப் பெயரையும் கொடுத்துப் பெண்களை வஞ்சிக்கின்றோம். ..................

இக்கொடுமைகள் இனியும் இப்படியே நிலைபெற்று வருமானால், சொற்ப காலத்திற்குள்ளாக அதாவது, ஒரு அரை நூற்றாண்டுக்குள்ளாக கல்யாணச் சடங்கும், சொந்தமும் உலகத்தில் அநேகமாய் மறைந்தே போகும் என்பதை உறுதியாய்ச் சொல்லலாம். இதை அறிந்தே மற்ற நாடுகளில் அறிஞர்கள் பெண்கள் கொடுமையை நாளுக்கு நாள் தளர்த்திக் கொண்டு வருகின்றார்கள். நம் நாடு மாத்திரம் குரங்குப் பிடியாய்ப் பழைய கருப்பனாகவே இருந்து வருகின்றது. ஆதலால், தலைகீழ் முறையான பெண்கள் கிளர்ச்சி ஒன்று நமது நாட்டில்தான் அவசரமாய் ஏற்பட வேண்டியிருக்கின்றது.

**பெரியார் – ‘பெண் ஏன் அடிமையானாள்’ நூலிலிருந்து**

# முகமூடி போட்டு பாபர் மசூதியை இடித்த கும்பல்

*தமிழ்நாடு மாணவர் கழக சார்பில் "யார் தேச விரோதிகள்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் சென்னையில் திராவிடர் விடுதலைக் கழக தலைமை அலுவலகத்தில் 5.2.2017 அன்று மாலை நடைபெற்றது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் விரிவாக்கம். (சென்ற இதழ் தொடர்ச்சி)*

மத நம்பிக்கைகள் உணர்வுகளோடு பிணைந்து கிடக்கின்றன. இந்த உணர்வுகளை மதவெறியாகக் கட்டமைக்கப்படுவது மிக மிக எளிது. பகுத்தறிவை மறுக்கும் வெற்று உணர்வுகள் அவ்வளவு ஆபத்தானவை. 'நாம் எல்லோரும் இந்து; அதுவே நமக்குப் பெருமை அதுவே நமது அடையாளம்; அதுவே நமக்கான நாடு' என்று பேசுவதும் உணர்வுகளைத் தூண்டி அதை வெறியாக மாற்றுவதும் தான் சங்பரிவார்களின் தொடர்ந்த வேலைத் திட்டமாக இருக்கிறது. அதற்காகவே அவர்கள் நிகழ்வுகளை திட்டமிட்டு உருவாக்கு கிறார்கள். இந்த உணர்வுகளை ஒரு முனைப் படுத்துவதற்கு ஒரு எதிரியை கட்டமைக்க வேண்டிய அவசியம் வந்துவிடுகிறது. இஸ்லாமியர்கள் இந்துக்களுக்கு எதிரானவர்கள். பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிரி நாடு என்ற இவர்களின் முழக்கம், இந்தப் பின்னணியிலிருந்துதான் உருவாகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பயங்கரவாதிகளை நாட்டில் நடமாட அனுமதிக்க மாட்டோம் என்று வாய்க் கொழுப்புடன் பேசி வரும் பார்ப்பன ராஜாக்கள், பாபர் மசூதி இடித்துத் தள்ளியதை தேச பக்தி நடவடிக்கை என்று கூறுகிறார்களா? பாபர் மசூதியை 'அவமானச் சின்னம்' என்று இறுமாப்புடன் பேசினார்களே அதற்குப் பெயர்தான் பேச பக்தியா?

1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ஆம் தேதி பாபர் மசூதியை இந்த வன்முறை காவிக் கும்பல் இடித்துத் தள்ளியது. அப்போது உ.பி.யில் முதல்வராக இருந்தவர் கல்யாண் சிங் என்ற பா.ஜ.க.காரர்தான். "எங்களை கரசேவை நடத்த அனுமதியுங்கள்; மசூதியின் பாதுகாப்புக்கு முழு உத்தரவாதத்தையும் உங்களுக்கு தருகிறோம்" என்று ஒரு மாநிலத்தின் முதலமைச்சரே அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் உறுதி மொழி தந்தார். உறுதிமொழியை காப்பாற்றினார்களா? இதைவிட சட்டவிரோதம், தேச விரோதம் வேறு இருக்க முடியுமா? பாபர் மசூதியை இடித்துத் தள்ளிவிட்டு என்ன சொன்னார்கள்? 'இது தன்னெழுச்சியாக நடந்தது; இந்துக்களின் கோபத்தின் வெளிப்பாடு' என்று இந்த கொடூரமான வன்முறையை நியாயப்படுத்தினார்கள்.

பாபர் மசூதியை ராமன் பிறந்த இடமாக மாற்றிக் காட்டுவதற்கு இவர்கள் பல 'மாஜிக்' வேலைகளை செய்ததையும் இளைய சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டும். இந்திய 'சுதந்திரம்' அறிவிக்கப்பட்ட அடுத்த இரண்டு ஆண்டுகளிலேயே இந்த 'தில்லுமுல்லுகள்' தொடங்கிவிட்டன. அப்போது பாகிஸ்தான் பிரிவினை நடந்து முடிந்துவிட்டது. எல்லைப் பகுதியில் மதக் கலவரங்கள் மோசமாக நடந்து கொண்டிருந்தன. அந்த சூழ்நிலையில் 'அகில பாரத இராமாயண மகாசபை' எனும் அமைப்பு, பாபர் மசூதியின் வாயிலில் 9 நாட்கள் இராமாயண 'உபன்யாசகங்களை' நடத்தி, 'இராமன் பட்டா பிஷேகம்' கதையையும் நடத்தி முடித்தாகி விட்டது.

இராமாயண 'உபன்யாசங்'களைத் தொடர்ந்து பாகவதர்களும் தீட்சதர்களும் அய்யங்கார்களும் ஒரு தொழிலாகவே நாடு முழுதும் நடத்தி வந்தார்கள். பார்ப்பனர்களுக்கு ஏதாவது ஒரு நெருக்கடி ஏற்பட்டால், உடனே இராமாயணத்தை எடுத்துப் படியுங்கள் என்று இராஜகோபலாச்சாரி கூறினார். அவர் 'சக்கரவர்த்தி திருமகள்' என்று 'கல்கி' பத்திரிகையிலேயே இராமாயணப் பெருமைகளை சீதையை முன் வைத்து ஒரு தொடரையும் எழுதினார். 'இராஜாஜி' ஒவ்வொரு வாரமும் எழுதிய தொடருக்கு உடனுக்குடனேயே தனது 'முரசொலி' நாளேட்டில் 'மூக்காஜி' என்ற புனைப் பெயரில் கலைஞர் கருணாநிதி மறுப்புத் தொடரை எழுதினார். இது வரலாறு.

அதேபோலத்தான் மசூதி வாசலிலும், 'இராமாயண உபன்யாசங்களை' 9 நாள் நடத்தி முடித்தவுடன், இறுதி நாளன்று இரவில் 'கிளைமாக்ஸ் காட்சி' ஒன்று நடந்தது.

"1949ஆம் ஆண்டு டிசம்பர் 23ஆம் தேதி விடியற்காலை பாபர் மசூதியின் மய்ய மண்டபத்துக்குள் 'இராமன், சீதை சிலைகள்' திடீரென்று காட்சி அளித்தன; இராம உபன்யாசத்தைக் கேட்க வந்த இராமனும் சீதையும் சிலையாக அப்படியே மசூதிக்குள் நுழைந்து விட்டார்கள்" என்று சொன்னால் கடைந்தெடுத்த மடையன்கூட அந்த கற்பனையை நம்புவானா? ஆனால், ஆர்.எஸ்.எஸ். அப்படித் தான் கூறியது.

அதன் அதிகாரபூர்வ பத்திரிகையான 'ஆர்கனைசர்' இப்படித்தான் பிறகு எழுதியது.

> "வரலாற்று முக்கியத்துவம் பெற்ற டிசம்பர் 23 அன்று காலை ஸ்ரீஇராமச்சந்திரன், சீதாதேவி ஆகியோரின் சிலைகள் 'ஜென்மஸ்தான'த்தில் மாயமாகத் தோன்றின" ('ஆர்கனைசர்' மார்ச் 29,1987).

அது என்ன ஜென்மஸ்தானம்! அதாவது அவர்கள் பிறந்த இடமாம். அது மசூதிக்குள் தான் இருந்ததாம். கடவுள்கள் பிறக்கிறார்களா? அப்படியானால் அவர்களுக்கு இறப்பு உண்டா? வால்மீகி இராமாயணம், இராமன் குதிரைக்குப் பிறந்தான் என்கிறது. இவர்கள் இராமன் ஒரு அவதாரம் என்று வேறு கூறுகிறார்கள். அவதாரம் எடுத்த கடவுள், தனது பிறப்பிடத்தில் மசூதி கட்ட ஏன் அனுமதித்தது? இப்படி எத்தனையோ கேள்விகளை கேட்கலாம். உண்மையில் என்ன நடந்தது என்பதை அந்த பைசாபாத் மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக இருந்த கே.கே.நய்யார் அன்றைய உ.பி. முதல்வராக இருந்தவருக்கு கடிதமாகவே எழுதி விட்டார்.

> "மசூதியில் ஒருவரும் இல்லாத நேரத்தில் சில இந்துக்கள் அங்கு புகுந்து சிலைகளை வைத்து விட்டனர். அப்போது 15 காவல் துறையினர் இருந்தும் இதைத் தடுக்கவில்லை" என்று எழுதினார். அது அத்துமீறிய ஆக்கிரமிப்பு அல்லவா?

பாபர் மசூதிக்குள் நடந்த அதே ஆக்கிரமிப்புதான் இப்போது கோயம்புத்தூர் வெள்ளியங்கிரி வனப் பகுதியிலும் நடக்கிறது. 'ஆதியோகி சிவன்' சிலை அத்துமீறி உரிய அனுமதியின்றி நிறுவப்பட்டு, அது ஒரு நாட்டின் பிரதமராலும் திறக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்தில் விட்ட புருடாவைப்போல், "ஈஷா யோக தியான மண்டபத்துக்கு அருகே ஆதியோகி சிவன் தானாகவே தோன்றினான்" என்று கதைவிட முடியாது. காதில் பூ சுற்றாதே என்று மக்களே பதில் சொல்லி விடுவார்கள். இதுவும்கூட காலத்தின் போக்கில் உருவான சிந்தனை மாற்றம்தான். எனவேதான் பழைய கட்டுக்கதைகள் இனி விலை போகாது என்று மூட்டைக் கட்டி வைத்துவிட்டு, "இனி கடவுளிடம் கோரிக்கைளை வைத்து பக்தர்கள் வரக்கூடாது; உங்களுக்குள்ளேயே மாற்றத்தை உருவாக்கிக் கொள்ள வாருங்கள்; யோகாவில் தான் அது கிடைக்கும்; அந்த யோகாவை உருவாக்கியவர் தான் ஆதியோகி" என்று சந்தையில் புதிய பக்தி தயாரிப்புப் பொருளை விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் ஜத்குருக்கள்.

அது இருக்கட்டும்; மீண்டும் இந்த தேசபக்தர்கள் கடப்பாறை தூக்கிய கதைக்கு வருவோம்.

1992 டிசம்பர் 6ஆம் தேதி மசூதி இடிக்கப் பட்டவுடன் நாடு முழுதும் கொந்தளித்தது. வேறு வழியின்றி அதன் காரணமாக அடுத்த 10 நாட்களிலேயே விசாரணை ஆணையம் ஒன்றை அமைத்தார்கள். லிபரான் என்ற நீதிபதி தலைமையில் அமைக்கப்பட்டது ஆணையம். அந்த ஆணையம் முறையாக விசாரணை நடத்தவே பா.ஜ.க. ஆட்சியினர் அனுமதிக்கவில்லை. முட்டுக்கட்டைப் போட்டு வந்தார்கள். நீங்கள் நம்பமாட்டீர்கள், 48 முறை அந்த விசாரணை ஆணையத்தின் காலவரம்பு நீட்டிக்கப்பட்டுக் கொண்டே வந்தது. 17 ஆண்டு காலத்துக்குப் பிறகு, 2009ஆம் ஆண்டில்தான் நாடு முழுதும் கடும் எதிர்ப்புகள் வந்த நிலையில் அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்கள்.

அந்த அறிக்கையின் ஒரு பகுதியை மட்டும் படித்துக் காட்டுகிறேன். இந்த தேசபக்த கும்பலின் உண்மை முகத்தைப் புரிந்து கொள்ள இந்த அறிக்கையே போதும்.

> "பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம் என்பது கரசேவகர்களால் தன்னெழுச்சியாக ஏற்பட்ட கோபம் அல்லது உணர்ச்சியின் வடிவம் விளைவாக ஏற்பட்டது என்று சில அரசியல், சமூக அமைப்புகளின் தலைவர்கள் கூறுவதை ஏற்க முடியாது. மசூதி தகர்க்கப்பட்ட விதம், மசூதியை தகர்க்கும் வேலையை மேற்கொண்ட கரசேவகர்களின் எண்ணிக்கை மசூதியின் மேல் மாடத்துக்குச் சென்ற கரசேவகர்கள், தங்கள் முகங்களை மூடிக் கொண்டு, தங்கள் அடையாளத்தை மறைத்துக் கொண்ட விதம், மாடத்துக்குள்ளிருந்த சிலைகள் மற்றும் பணப் பெட்டிகளை நீக்கியுள்ளமை, பின்னர் அவற்றை புதிதாக கட்டப்பட்ட கோயிலில் வைத்துள்ளமை (make shift temple) மசூதி இடிப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட கருவிகள் மற்றும் பொருள்கள், மிக அவசரகதியில் (தற்காலிக) கோயில் கட்டப்பட்டிருத்தல் ஆகிய அனைத்தையும் பரிசீலனை செய்து பார்க்கும் போது மசூதி இடிப்பு மிகவும் துல்லியமான தயாரிப்புப் பணிகளுக்குப் பின்னரும் நன்கு திட்டமிட்ட பின்னரும் மேற்கொள்ளப்பட்ட ஒன்று என்றே முடிவுக்கு வரவேண்டி யிருக்கிறது"

இந்த தேசபக்த கும்பல் முகத்தை மூடிக்கொண்டு கடப்பாறைகளைத் தூக்கிக் கொண்டுபோய் இடித்திருக்கிறது. இதைவிட கோழைத்தனம் வேறு இருக்க முடியுமா? இந்தத் தாக்குதல் நன்கு திட்ட மிடப்பட்டது என்கிறது ஆணையத்தின் அறிக்கை.

தொலைக்காட்சியில் அமர்ந்து கொண்டு அணுஉலை ஆபத்துக்குப் போராடியவர்களையும் மத வெறியை எதிர்ப்பவர்களையும் திமிர்ப் பார்வை யோடு ஏளனத்தோடு தேச விரோதிகள் என்று குற்றம் சாட்டும் பார்ப்பனர்களைக் கேட்கிறோம்; இந்த விசாரணை அறிக்கைக்கு, என்னப்பா, உமது பதில்?

இந்த மசூதியை இடித்ததற்குப் பிறகு உ.பி. பா.ஜ.க. முதல்வர் கல்யாண்சிங் கல்கத்தாவிலே போய் என்ன பேசினார், தெரியுமா?

> "மசூதியை இடிக்கும் வேலையை ஒப்பந்தக்காரர்களிடம் கொடுத்திருந்தால் அவர்கள் இடிப்பதற்கு வெகுநாட்கள் எடுத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் எங்களுடைய கரசேவகர்களோ எங்களுடைய நோக்கத்தை 5 மணி நேரத்திலேயே செய்து முடித்து விட்டார்கள்."

எப்படிப்பட்ட திமிர் பேச்சு! உடனே இதற் கெல்லாம் என்ன ஆதாரம் என்று இங்கே சில காவிக் கும்பல் எதிர் கேள்வி கேட்கும். 'அவசரப்படாதே, ஆதாரத்தோடு தான் கூறுகிறோம்' என்பதே நமது பதில். அப்போது மேற்கு வங்க முதலமைச்சராக இருந்த ஜோதிபாசு, இந்த வெறி பிடித்த கல்யாண்சிங் பேச்சை வீடியோ பதிவுடன் லிபரன் ஆணையத்துக்கு மேற்கு வங்க அரசின் சார்பில் ஒரு ஆவணமாகவே சமர்ப்பித்தார். ஆணையத்தின் சாட்சியங்களில் ஒன்றாக அது ஏற்கப்பட்டது.

தேச பக்த கொழுந்துகளே! இந்த வராறுகளை எல்லாம் வீதிக்கு வீதி இனி இளைய சமுதாயம் பேசத்தான் போகிறது! அதைப் பார்க்கத்தான் போகிறீர்கள்!

**(அடுத்த இதழில் முடியும்)**

# திருப்பூரில் நந்தினிக்கு நீதி கேட்டு கண்டன ஆர்பாட்டம்

திராவிடர் விடுதலைக் கழகம் திருப்பூர் மாவட்டத்தின் சார்பில் 10.02.2017 வெள்ளிக்கிழமை அன்று மாலை 3.30 மணியளவில் திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் அருகில் பாலுறவு வன்முறை படுகொலைக்கு உள்ளான நந்தினி சாவுக்கு நீதி கேட்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்து முன்னணி மாவட்ட தலைவர் ராஜசேகரை கைது செய் ! வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்று ! நந்தினி குடும்பத்திற்கு உரிய இழப்பீடு வழங்கு ! தலித் மக்களின் பாதுகாப்பை உறுதி செய் ! - என முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் தோழமை இயக்கத்தைச் சேர்ந்த பேரவையின் மாவட்டச் செயலாளர் சோழன், திருவள்ளுவர் பேரவை அருண் குமார், இஸ்லாமிய அமைப்பின் ரஹ்மான், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி, மாவட்டத் தலைவர் முகில்ராசு, மாவட்ட செயலாளர் நீதிராசன், மாநகர செயலாளர் மாதவன் ஆகியோர் கண்டன உரையாற்றி னர். தோழர் சங்கீதா, கொளத்துப் பாளையம் இராமசாமி, முத்து, தனபால், கருணாநிதி, அகிலன், பரிமளராசன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# வாழ்வாதாரத்தினை அழிக்கும் 'அய்ட்ரோ கார்பன்' திட்டம்

மீத்தேன் திட்ட செயல்பாட்டுக்கான அனுமதியை ரத்து செய்து விட்டதாக மத்திய அரசு கடந்த 2016ஆம் ஆண்டு அறிவித்தது. இதனால் காவிரி டெல்டாவில் போராட்டங்கள் அடங்கியிருந்தது. இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டம், நெடுவாசலில் மீத்தேன், ஷேல் கேஸ் போன்ற இன்னொரு வடிவில் இயற்கை எரிவாயு எடுக்கும் புதிய திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் பெயர் ஹைட்ரோ கார்பன் திட்டம் என சொல்லப்படுகிறது. இந்த திட்டத்தை செயல்படுத்தக் கூடாது என நெடுவாசல் பகுதியில் மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். இந்த திட்டம் மீத்தேன் திட்டத்தின் மறு வடிவம் என்று சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

இப்போது மோடி அரசு அறிவித்துள்ள ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு முன்னர் திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியை மையப்படுத்தி 760 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் சுமார் 500 மீட்டர் ஆழத்தில் படிந்துள்ள மீத்தேன் மற்றும் ஷேல் கேஸ் எரிவாயுவை வெளிக்கொணரும் வகையில் காவிரிப் படுகையில் இந்த திட்டத்திற்கான ஒப்பந்தத்தை அளித்திருந்தது மத்திய அரசு. பொதுமக்களின் தொடர் எதிர்ப்பு காரணமாக மத்திய அரசு ரத்து செய்தது.

இதைத் தொடர்ந்து சுமார் 10 ஆயிரம் அடி ஆழத்தில் உள்ள பூமிப் பாறைகளின் இடுக்கில் உள்ள ஷேல் கேஸ் எனப்படும் பாறைப்படிம எரிவாயு எடுக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு உரிமம் வழங்கியது. இத்திட்டத்தை எதிர்த்து விவசாயிகள் சார்பில் வழக்கும் தொடரப்பட்ட நிலையில் அப்பணியை தொடர முடியாத நிலைக்கு தள்ளப்பட்டது. இந்த சூழ்நிலையில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியை அதிகரிக்கவும், இந்த தொழிலில் முதலீடுகளை அதிக அளவில் கவரும் நோக்கத்துடன் கடந்த 10.03.2016 அன்று பிரதமர் நரேந்திர மோடி ஹைட்ரோ கார்பன் (Hydro Carbon Exploration and Licensing Policy – Help) என்ற கொள்கை திட்டத்தை அறிவித்தார். அதில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் ஏற்கனவே கடைபிடித்து வந்த விதிமுறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டன. அதன்படி பூமிக்கு அடியில் எந்த வடிவத்தில் ஹைட்ரோ கார்பன் இருந்தாலும் அதனை வெளிக்கொணர ஒரே ஒரு உரிமம் பெற்றால் போதும் என்ற முக்கியத்துவம் வாய்ந்த சலுகை அதில் இடம் பெற்றுள்ளது.

இதன் மூலம் புதுக்கோட்டை மாவட்டம், நெடுவாசல் மற்றும் புதுச்சேரி பிரதேசம் காரைக்கால் போன்ற பகுதிகளில் ஹைட்ரோ கார்பன் எரிவாயு எடுக்கும் திட்டத்திற்கு ம த்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த பின்னணியில் பார்த்தால் ஏற்கனவே ரத்து செய்வதாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு நிலுவையில் உள்ள மீத்தேன் ஷேல் கேஸ் திட்டத்தையும் செயல்படுத்த இந்த நிறுவனமோ அல்லது இதைச் சார்ந்த நிறுவனங்களோ சமயம் பார்த்து நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான அடி ஆழத்தில் உள்ள தண்ணீரை வெளியேற்றி எடுக்கப்படும் மீத்தேன் ஷேல் கேஸ் திட்டங்களால் மக்களுக்கு ஏற்படும் நோய் பாதிப்புகள் உள்ளிட்ட அச்சத்தைப் போக்க மத்திய அரசு ஆக்கப்பூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக ஹைட்ரோ கார்பனுக்கு என தனிக் கொள்கையை புகுத்தி நாடு முழுவதும் 31 இடங்களை தேர்ந்தெடுத்து அவற்றில் முதற்கட்டமாக நெடுவாசல் மற்றும் காரைக்கால் பகுதிகளில் திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளதால் மக்கள் போராட்டங்கள் அதிகரித்து வருகிறது.

புதுச்சேரி பிரதேசம், காரைக்காலில் இந்த திட்டத்தை அனுமதிக்க மாட்டோம் என்று புதுவை முதலமைச்சர் நாராயணசாமி பகிரங்கமாக அறிவித்துள்ளார். ஆனால் தமிழகத்தில் இப்போது வரை இப்படி ஒரு அறிவிப்பை வெளியிடத் தயாராக இல்லை. இத்திட்டத்திற்கு முழுமையாக பொதுமக்களிடமோ, விவசாயிகளிடமோ கருத்து கேட்காமல் அனுமதிப்பதன் மூலம் ஏற்கனவே உள்ள மீத்தேன் ஷேல் கேஸ் திட்டங்களை கொல்லைப்புற வழியாக நிறைவேற்ற மத்திய அரசு முயற்சித்து வருகிறது. எந்த ஒரு வளர்ச்சித் திட்டமும் பொது மக்களின் வாழ்வாதாரங்களை பாதிக்காத வகையில் நிறைவேற்றப்பட வேண்டும்.

மக்களின் நீண்ட கால வாழ்வு மற்றும் ஆரோக்கியமான மேம்பாட்டிற்கு ஏற்ற வகையில் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். வெறும் வியாபார நோக்கத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதாக இல்லாமல் தங்களைச் சுற்றியுள்ள இயற்கை வளங்களை மக்கள் அனுபவிக்கும் உரிமையில் கைவைக்காமல் இருக்க வேண்டும். மக்களின் எதிர்ப்புகளையும் மீறி இந்த திட்டம் தொடரப்படுமேயானால் இன்றைய தலைமுறைகளின் உரிமைகள் மட்டுமல்ல; எதிர்கால தலைமுறைகளின் உரிமைகளும் பறிக்கப்பட்டு இயற்கை நீதிக்கு புறம்பானதாக ஆகிவிடும். நெடுவாசல், காரைக்கால் பகுதி மக்கள் மட்டுமல்ல; தமிழக மக்கள் மற்றும் விவசாயிகளின் நலன் கருதி ஹைட்ரோ கார்பன் இயற்கை எரிவாயு எடுக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதை திரும்பப் பெற வேண்டும். ஒட்டுமொத்த மக்களின் எதிர்பார்ப்பு ஹைட்ரோ கார்பன் திட்டம் கூடாது என்பதுதான்.

# தலித் மக்கள் உரிமைகளை பறித்த 'வாஸ்து' நம்பிக்கை

வாஸ்து மூடநம்பிக்கை ஜாதிவெறிக்கு துணை போவதோடு அரசின் நலத் திட்டங்களையே முடக்குகிறது என்பதற்கு சான்றாக தெலுங்கானாவிலிருந்து ஒரு செய்தி வந்துள்ளது. தெலுங்கானா முதலமைச்சர் சந்திரசேகர் ராவ், அரசு செலவிலேயே திருப்பதி ஏழுமலையானுக்கு ரூ.5 கோடி தங்க நகைகளை காணிக்கையாக்கினார். அரசு செலவிலேயே தனது ஆலோசகராக, ஒரு வாஸ்து பண்டிதரை நியமித்துக் கொண்டிருக்கிறார். முதலமைச்சர் அலுவலகத்தையும் சொந்த இல்லத்தையும் ஒன்றாக்கி, அரசு செலவிலேயே 25 கோடி செலவில் வாஸ்து முறைப்படி மாளிகை ஒன்றையும் எழுப்பியிருக்கிறார்.

அதே தெலுங்கானா மாநிலத்தில்தான் இப்படி ஒரு கூத்தும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஏழை மக்களுக்கு இரண்டு படுக்கை அறைகளைக் கொண்ட வீடு கட்டும் திட்டம் ஒன்றை அரசு அறிவித்துள்ளது. திப்பண்ணப்பேட்டை எனும் இந்த கிராமத்தில் இத்திட்டத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டு, 2.27 ஏக்கர் இடத்தில் கட்டுமானப் பணிகள் தொடங்கின. கிராமத்தில் 20 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் 16 பயனாளிகள் 'தலித்' பிரிவினர். கிராமத்தின் பிரதான சாலை அருகே கட்டப்படும் இந்தக் குடியிருப்புகள் தலித் மக்களுக்கு கிடைத்திருப்பதை கிராம சாதிவெறியர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனவே, "தரைதளத்தில் தலித் மக்களுக்காக கட்டப்படும் இரண்டு அறை குடியிருப்புகளால் கிராமத்துக்கு வாஸ்து குற்றம் ஏற்பட்டுள்ளது" என்ற புரளியை ஜாதி வெறியர்கள் கிளப்பிவிட்டனர். இதை ஊர் மக்களும் நம்பி, அந்த குடியிருப்புகளை கட்டவிடாமல் தடுத்து வருகின்றனர். குடியிருப்புகள் கட்டும் பகுதியில் பிள்ளையார் கோயில் ஒன்றை அவசர அவசரமாக உருவாக்கி, 'வாஸ்து தோஷம்' கழிக்க நாள்தோறும் பூஜைகள் செய்யத் தொடங்கிவிட்டார்கள். செய்தியறிந்த வருவாய்த் துறை அதிகாரிகளும் காவல்துறையினரும் கிராமத்துக்கு விரைந்து கட்டுமானப் பணிகளை நிறுத்தச்சொல்லி விட்டார்கள்.

இரண்டு அறை கொண்ட வீடுகளை இந்த பிரதான இடத்தில் கட்டுவது வாஸ்து விரோதம்; இங்கே கோயில்தான் கட்ட வேண்டும் என்று ஜாதி வெறியிலும் மூடநம்பிக்கையிலும் மூழ்கிக் கிடக்கும் மக்கள் கூறி வருகிறார்கள். இது திட்டமிட்டே உருவாக்கப்படும் புரளி என்கிறார் - கிராம அதிகாரி ஆர்.கங்காத்ரா. ஆனாலும் தலித் மக்களுக்கு கிடைக்க வேண்டிய வீடுகள் கிடைக்க விடாமல் தடுக்கப்பட்டு விட்டன. வாஸ்து நம்பிக்கை இதற்குத்தான் பயன்பட்டிருக்கிறது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

செய்து சேகரித்து வைத்துள்ளோம். அதற்கேற்றவாறு புரோகிதர்களையும் உடனே வீட்டுக்கு அனுப்பி வைப்போம். பூஜை சடங்குப் பொருள்களுக்கோ, புரோகிதர்களுக்கோ அலைந்து நேரத்தை வீணடிக்க வேண்டாம். 3000 வேத புரோகிதர்கள் உலகம் முழுதும் எங்களது இணைப்பில் இருக்கிறார்கள். உலகில் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் இந்த 'புரோகித சேவை' அங்கே கிடைக்கும். இதுவரை, முப்பதாயிரம் புரோகித சேவைகளை இந்தியா மற்றும் அமெரிக்கா, இலண்டன், மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட பல வெளிநாடுகளுக்கும் வழங்கியிருக்கிறோம். இதற்கான 'ஆப்ஸ்'ஸைப் பயன்படுத்தி, 'ஆன்லைன்' வழியாகப் பணம் கட்டினால் போதும்; சடங்குகளை முடித்து விடலாம். பல கோடி ரூபாய் முதலீட்டில் சென்னையை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகிறது" என்று அவர் பேட்டி அளித்துள்ளார்.

இணையதளம் வழியாகவே வெளிநாட்டில் வாழும் 'வைதீகக் குடும்பங்களுக்கு', 'புரோகிதம்' செய்யப்படுவதாகவும் அந்த செய்தி கூறுகிறது.

வாடகைக்கார், ஆட்டோக்களைக் கூட இப்போது 'இணையம்' வழியாக வீட்டுக்கு அழைக்கும் வசதிகள் வந்து விட்டன.

'ஓலா', 'ஊபர்' வாகனங்களை இணையம் வழியாக பதிவு செய்தால் அடுத்த சில நிமிடங்களில் வீட்டு முகவரியில் வந்து நிற்கின்றன. இந்த வாகனம் மனிதர்களை போக வேண்டிய இடங்களுக்கு கொண்டு போய் சேர்த்து, முறையான கட்டணத்தை வாடிக்கையாளர்களை ஏமாற்றாமல் வாங்குகின்றன. அதே போன்று இனி அர்ச்சகர்களும், புரோகித சடங்குகளும், பூஜை பொருள்களும் 'ஆப்ஸ்' வழியாக வீடுகளுக்கு வந்து சேருவார்கள். 'ஓலோ', 'ஊபர்' நிறுவன வாகனங்கள் பயணிகளை ஏமாற்றாது கட்டணங்களைப் பெற்றுக் கொண்டு போய்ச் சேர வேண்டிய இடத்துக்குக் கொண்டு போய் சேர்க்கும். இதேபோல் வீடு தேடி வரும் புரோகிதமும், சடங்குகளும் மோட்சத்துக்கே கொண்டு போய் சேர்ப்பார்களா என்று யாரும் கேட்டு விடாதீர்கள். அப்படி 'சொர்க்கத்துக்கு நேராக அனுப்பி வைத்தால்' 'கொலைகார புரோகிதம் ஒழிக' என்ற கூச்சல்தான் கேட்கும்.

இப்போது புரோகிதம் ஒரு 'பிசினஸ்', அவ்வளவுதான்! இனி 'ரோபோக்கள்'கூட பூணூல் போட்டுக் கொண்டு புரோகிதம் செய்யும் நிலை அடுத்து வரலாம். அதெல்லாம் வேதத்திலே இருக்கு துன்னு அப்போதும் மோடிகள் வெட்கமின்றி பேசுவார்கள்.

### கழகத் தொடர் போராட்டம் வெற்றி

## மயிலைப் பகுதி மதுக்கடை மூடப்பட்டது

24.3.2017 அன்று தமிழக அரசு 500 மதுபானக் கடைகள் சென்னை மண்டலத்தில் மூடப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருந்தது. மந்தைவெளி செயின்ட் மேரீஸ் பாலத்தின் அருகிலுள்ள பொது மக்களுக்கு இடையூறாக இருக்கும் அரசு மதுபானக் கடையை (கடை எண்.912) மூட தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் பகுதி பொது மக்கள் பல போராட்டங்கள் நடத்தி வந்தனர். இப்போது இந்தக் கடை தமிழக அரசு அறிவிப்பால் மூடப்பட்டது. இதன் மகிழ்வாக கழகம் சார்பில் தோழர்கள், ஊர் பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கி கொண்டாடினர்.

## 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வங்கிக் கணக்கு

கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை, 'கரண்ட்' அக்கவுண்ட்.

எண் : 1257115000002041 – IFSC KVBL0001257

**ஆண்டுக்கட்டணம் ரூ.200**

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 02nd March 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN